**தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் இணை செயல்முறைகள், சென்னை – 6.**

**ந.க.எண்.019528/எம்/இ1/2022 நாள் 22.08.2022**

**பொருள்:–** பள்ளிக்கல்வி – கல்விசாரா செயல்பாடுகள் – 2022–2023 ஆம் கல்வியாண்டில் சிறார் திரைப்படங்கள் திரையிடுதல் – பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் – முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்குதல் – சார்ந்து.

**பார்வை:–** தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையர் மற்றும் தொடக்கக்கல்வி இயக்குநரின் இணை செயல்முறைகள் ந.க.எண்.019528/எம்/இ1/2022 நாள் 11.06.2022.

.......

பார்வையில் காணும் செயல்முறைகளின்படி, மாதத்தின் ஒவ்வொரு இரண்டாவது வாரமும் அனைத்து அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சிறார் திரைப்படங்கள் திரையிடப்பட்டு வருகின்றது. திரைப்படங்கள் மாணவர்களுடைய சிந்தனை மற்றும் செயல்பாடுகளில் ஏற்படுத்தும் தாக்கம் அளப்பரியது. இக்காட்சி ஊடகத்தின் வாயிலாக மாணவர்களின் முன்னேற்றம், புதிய பார்வை மற்றும் வாழ்வியல் நற்பண்புகளை மேம்படுத்துவதே இம்முயற்சியின் முக்கிய நோக்கமாகும்.

www.tamnewsteachers.blogspot.com

**<u>பள்ளிகளில் சிறார் திரைப்படங்கள் திரையிடுவது சார்ந்து வழிகாட்டு நெறிமுறைகள்</u>**

- அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 9–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு, சிறார் திரைப்படங்களை அவற்றிற்கென ஒதுக்கப்பட்டுள்ள பாடவேளைகளில் திரையிட வேண்டும். அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் இருப்பின் குழுக்களாகப் பிரித்துத் திரையிட வேண்டும்.
- ஒவ்வொரு பள்ளியிலும் இச்செயல்பாடுகளுக்கென ஒரு ஆசிரியருக்குப் பொறுப்பளிக்க வேண்டும். இவ்வாசிரியர்களுக்கு தொழில் நுட்ப மேலாண்மை,

திட்டமிடுதல் மற்றும் மாணவர்களை ஒருங்கிணைத்தல் சார்ந்த சிறப்புப் பயிற்சி வழங்கப்படும். இவ்வாசிரியர் மூலம் பள்ளியிலுள்ள 6 முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிற்றுவிக்கும் பிற ஆசிரியர்களுக்கும் இப்பயிற்சி வழங்கப்பட்டு சுழற்சி முறையில் பிற ஆசிரியர்களையும் இந்நிகழ்வுகளில் ஈடுபடுத்துதல் வேண்டும்.

- திரைப்படக்காட்டி (Projector) / தொலைக்காட்சிப்பெட்டி /ஒலிபெருக்கி இல்லாத பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக் குழுக்கள் வாயிலாக வாடகைக்குப் பெற்றுத் திரையிடவேண்டும்.
- திரைப்படம் திரையிடப்படுவதற்கு முன்பு சம்பந்தப்பட்ட ஆசிரியர் மாணவர்களிடம் திரைப்படம் குறித்து சிறு உரையாடல் நிகழ்த்தி, மாணவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.
- திரைப்படம் முடிந்தபிறகு, காட்சிப்படுத்தப்பட்ட திரைப்படத்தின் மையக்கருத்து அல்லது தாக்கம் சார்ந்து ஒரு உரையாடலை மாணவர்களிடையே நிகழ்த்த வேண்டும். மேலும், மாணவர்களின் கருத்துகளை இணைப்பில் வழங்கப்பட்டுள்ள பின்னூட்டக் கேள்வித்தாள் வாயிலாகப் பெறுதல் வேண்டும்.
- ஏதேனும் 5 மாணவர்களை (வழக்கமாக வகுப்பில் பேசாத மாணவர்களை முன்னிலைப்படுத்துதல் நலம்) ஆசிரியர் கண்டறிந்து அனைத்து மாணவர்கள் முன்னிலையிலும் 2-3 நிமிடங்கள் திரைப்படம் குறித்து பேசச் செய்ய வேண்டும். பின்னர், அனைத்து மாணவர்களையும் திரைப்படம் குறித்து தங்கள் கருத்துக்களை அவர்கள் சொந்த நடையில் எழுதித் தரச் சொல்ல வேண்டும். மாணவனின் கருத்துகள், படம் குறித்த விமர்சனமாகவோ, பாத்திரம் குறித்த திறனாய்வாகவோ, படக்கதைச் சுருக்கமாகவோ, படத்தில் தான் உணர்ந்தவற்றை விவரிப்பதாகவோ இருக்கலாம். அனைத்து மாணவர்களின் படைப்புகளையும் ஆவணப்படுத்த வேண்டும். சிறந்த படைப்புகளை பள்ளிக்கல்வித்துறையால் வெளியிடப்படும் சிறார் இதழில் இடம்பெறச் செய்ய அனுப்பி வைக்க வேண்டும்.

www.tamnewsteachers.blogspot.com

- ஒவ்வொரு மாதமும் திரையிடப்பட வேண்டிய திரைப்படத்திற்கான இணைப்பு (Link) பள்ளிகளுக்கு அனுப்பப்படும்.
- பள்ளி அளவில் ஒவ்வொரு மாதமும் சிறந்து விளங்கும் மாணவர்களை ஒன்றிய அளவிலும் ஒன்றிய அளவில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை மாவட்ட அளவிலும் பங்கேற்க வாய்ப்பளித்தல் வேண்டும். ஒருமுறை பள்ளியளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவன்/மாணவியை அடுத்த மாதம் தேர்ந்தெடுத்தல் கட்டாயமாகத் தவிர்க்கப்பட வேண்டும்.
- ஒவ்வொரு மாதமும் இவ்வாறு மாவட்ட அளவில் தெரிவு பெறும் மாணவர்கள் அனைவரும் ஆண்டுக்கொருமுறை மாநில அளவில் நடைபெறும். சிறார் திரைப்படத் திருவிழாவில் பங்கேற்பர். அந்நிகழ்வில் கலைத்துறையைச் சார்ந்த வல்லுநர்களோடு கலந்துரையாடுவர்.
- மாநில அளவில் பங்கேற்கும் மாணவர்களில் சிறந்து விளங்கும் 15 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு வெளிநாடுகளுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவார்கள்.

www.tamnewsteachers.blogspot.com

மேற்குறிப்பிட்டுள்ள அனைத்து வழிகாட்டு நெறிமுறைகளையும் தவறாது பின்பற்றி இந்நிகழ்வினை பள்ளிகளில் சிறப்பாகச் செயல்படுத்திட அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

22.8.22

தொடக்கக் கல்வி இயக்குநர் மற்றும்
பள்ளிக்கல்வி ஆணையருக்காக

பெறுநர்
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

## இணைப்பு – 1

## சிறார் திரைப்படம் திரையிடும் போது பள்ளியளவில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஆயத்தச் செயல்பாடுகள்:

1. ஒவ்வொரு பள்ளியிலும் சிறார் திரைப்படச் செயல்பாடுகளுக்கென ஒரு ஆசிரியருக்குப் பொறுப்பு ஒதுக்கப்பட வேண்டும்.

2. 6 முதல் 9–ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களை எத்தனை குழுக்களாகப் பிரிக்க வேண்டும் என்று முன்னரே கணக்கிட வேண்டும்.

3. ஒரு குழுவாகவோ (6 முதல் 9–ஆம் வகுப்பு) அல்லது இரண்டு குழுக்களாகவோ (6–7 வகுப்புகள் மற்றும் 8–9 வகுப்புகள்) மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களைப் பிரித்து திரையிட்டுக் காட்டலாம். பிற வகுப்பு ஆசிரியர்களையும் இதில் ஈடுபடச் செய்ய வேண்டும்.

4. அனைத்து மாணவர்களும் திரைப்படத்தைக் காணச் செய்ய ஏதுவாக காற்று வசதியுடன் கூடிய போதுமான அறை / இடத்தைத் தெரிவு செய்ய வேண்டும்.

5. திரையிடுதலுக்கு முன் திரைப்படக்காட்டி மற்றும் ஒலிப்பதிவு சாதனங்கள் சரியாக இயங்குவதை உறுதி செய்திட வேண்டும். குழந்தைகள் சிறந்த திரைப்பட அனுபவத்தைப் பெறவும், மின் சாதனங்கள் அதிக வெப்பம் அடையாமல் காக்கவும், வெளிப்புற ஒளி குறைவாக இருப்பதையும் போதுமான காற்று வசதி உள்ளதையும் உறுதி செய்திடல் வேண்டும்.

6. திரைப்படக்காட்டி (Projector) / தொலைக்காட்சிப் பெட்டி / ஒலிபெருக்கி இல்லாத பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக் குழுக்கள் வாயிலாக வாடகைக்குப் பெற்றுத் திரையிட வேண்டும்.

7. திரைப்படத்திற்காக அனுப்பப்பட்ட இணைப்பிலிருந்து படம் பதிவிறக்கம் செய்யப்பட்டு, முந்தைய நாளிலேயே பென்–டிரைவ்/சிடி/டிவிடியில் (Pendrive/CD/DVD) தயாராக வைக்கப்பட்டுள்ளதை உறுதி செய்திடல் வேண்டும்.

8. திரைப்படத்தின் சுருக்கத்தைப் பொறுப்பாசிரியர் முன்னரே படித்திருக்கவேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட குழுக்கள் இருப்பின், அக்குழுக்களின் பொறுப்பாசிரியர்களுக்கும் இதனைப் பகிர்தல் வேண்டும்.

9. மாணவர்களின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு மின்னிணைப்புகள் அனைத்தும் சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்து அவற்றை இயக்க வேண்டும்.

## சிறார் திரைப்படம் திரையிடும் போது பள்ளியளவில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஆயத்தச் செயல்பாடுகள்:

1. திரைப்படம் திரையிடுவதற்கு முன் 'சிறார் திரைப்படத் திருவிழா' திட்டத்தின் நோக்கத்தை மாணவர்களுக்கு விரிவாக எடுத்துரைக்க வேண்டும்.

2. இதைத் தொடர்ந்து, திரைப்படத்தின் விமர்சனத்தையும் கதைச்சுருக்கத்தையும் சுவாரசியமான விஷயங்களையும் பகிர்ந்து கொள்ள வேண்டும் அல்லது திரைப்படத்தின் முடிவைத் திரையிடாமல் மாணவர்களிடம் மீதமுள்ள கதையை அவர்களின் கற்பனைத்திறனுக்கு ஏற்ப அமைக்கச் சொல்லவேண்டும்.

3. திரைப்படத்தை அமைதியாகப் பார்க்க வேண்டும் என்பதை ஆசிரியர் குழந்தைகளுக்கு விளக்க வேண்டும். ஏனெனில், இது அவர்களின் கவனத்தை மேம்படுத்துவதோடு திரையிடலுக்குப் பின்தொடரும் உரையாடலுக்கும் உதவும்.

4. திரைப்படம் முடிந்த பிறகு இப்படத்தைச் சார்ந்து வினாடி–வினா / கலந்துரையாடல் / விவாதம் போன்றவை நடத்தப்படும் என்பதை மாணவர்களுக்குத் தெரிவிப்பதன் வாயிலாக இந்நிகழ்வை மேலும் சுவாரசியமாக்கலாம்.

5. ஆசிரியர் உரையாடலுக்கான அனைத்து கேள்விகளையும் தயாராக வைத்திருத்தல் நலம்.

## சிறார் திரைப்படம் திரையிடல் முடிந்ததும் பள்ளியளவில் மேற்கொள்ளப்பட வேண்டிய செயல்பாடுகள்:

1. திரைப்படம் முடிந்த பிறகு, அனைத்து உபகரணங்களின் இணைப்புகள் மற்றும் மின் இணைப்புகளைத் துண்டித்த பிறகு சம்பந்தப்பட்ட நபரிடம் அவற்றைப் பாதுகாப்பான இடத்தில் வைப்பதற்காக ஒப்படைக்க வேண்டும்.

2. இணைப்பில் வழங்கப்பட்டுள்ள படிவத்தின் (Template) அடிப்படையில், திரைப்படத்தைப் பற்றிய கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள ஆர்வமுள்ள குழந்தைகளை எழுத அல்லது வரையச் செய்தல் வேண்டும்.

3. கதைக்களம், கதாபாத்திரங்கள், உரையாடல்கள், இடம், வண்ணங்கள், ஒலி மற்றும் ஒட்டுமொத்த திரைப்படம் தொடர்பான கேள்விகளில் கவனம் செலுத்தும் 'ஸ்பாட்லைட்' (Spotlight) என்ற நிகழ்வு நடைபெறும். இந்த நிகழ்வு 15 - 20 நிமிடங்கள் வரை அனைத்து மாணவர்களும் பங்கேற்கும் வகையில் நடைபெற வேண்டும். ஒவ்வொரு மாதமும் பரிசுகளோ சான்றிதழ்களோ வழங்கலாம். தனி நபருக்கு ஒன்றும் அணிக்கு ஒன்றும் வழங்கலாம். அதிக கேள்விகளுக்கு யார் அல்லது எந்த அணி பதிலளிக்கிறது என்பதைப் பொறுத்து, அந்த நபர் / குழுவிற்குப் பரிசு வழங்கலாம்.

4. குழந்தைகள் தங்களுக்கு மிகவும் பிடித்த காட்சி அல்லது உரையாடலை இயக்கியும் / நடித்தும் காட்டச் செய்யலாம்.

5. மாணவர்களைப் படத்தின் தொடர்ச்சியாக இருக்கும்படி ஏதேனும் ஒரு கதையை எழுதவோ விவரிக்கவோ செய்யலாம்.

6. மாணவர்களின் சிறந்த செயல்பாடுகளை (ஓவியம்,கட்டுரை, பிற.,) கம்பிப் பந்தலிலோ, பள்ளி சுவரொட்டியிலோ (Notice Board) காட்சிப் படுத்தலாம்.

## <u>இணைப்பு-2</u>

## <u>Template for the feedback</u>

1. இத்திரைப்படத்தின் மூலக்கரு / மையக் கருத்து என்ன?

2. கதை எதைப் பற்றியது அல்லது யாரைப் பற்றியது? அதை எப்படி அறிந்தீர்கள்?

3. கதையில் நிகழும் மிக முக்கியமான சம்பவங்கள் என்னென்ன?

4. எந்த கதாபாத்திரம் உங்களை மிகவும் கவர்ந்தது?

5. திரைப்படத்தின் வாயிலாக தாங்கள் கற்றுக்கொண்ட முக்கிய கருத்துகள் என்னென்ன?

6. இப்படத்திற்கு வண்ணங்கள் எவ்வாறு முக்கியத்துவம் அளிக்கிறது?

7. இப்படத்திற்கு இசை அல்லது ஒலி எவ்வாறு முக்கியத்துவம் அளிக்கிறது?

8. எந்த ஒரு கதாபாத்திரத்திற்கு நீங்கள் பின்னனிக்குரல் கொடுக்க விரும்புவீர்கள்? அப்படி இருப்பின் நீங்கள் என்ன சொல்வீர்கள்?

9. இத்திரைப்படத்தைப் பற்றி உங்கள் நண்பர்களுடன் உரையாடுவீர்களா? அவர்களை இப்படத்தைக் காணச் சொல்வீர்களா? ஏன்?

10. இத்திரைப்படம் பற்றி உங்களின் எண்ணங்களை 2 வரிகளில் எழுதுக.

## For Spotlight

1. கதையின் தொடக்கத்தில், இடையில் மற்றும் முடிவில் என்ன நடக்கிறது?

2. இந்த கதை எந்த இடத்தில் / ஊரில் நடக்கிறது? அதை எப்படி உங்களால் கண்டறிய முடிந்தது?

3. எந்த கதாபாத்திரத்திற்காவது குறிப்பிட்ட இசை அல்லது ஒலி கொடுக்கப்பட்டுள்ளதா?

4. இத்திரைப்படத்தில் முக்கிய கதாபாத்திரம் யார்?

5. திரைப்படத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட முக்கிய கதாபாத்திரங்கள் உள்ளனவா?

6. இக்கதையின் மையக் கருத்து என்ன?

7. எந்த ஒரு குறிப்பிட்ட கதாபாத்திரத்திற்காவது குறிப்பிட்டவண்ணம் / வண்ணங்கள்தொடர்புடையதாகஉள்ளதா?

8. இந்த கதை எப்போது நிகழ்கிறது எனக் கூற முடியுமா? இந்த கதை கடந்த காலத்தை சார்ந்ததா அல்லது நிகழ்காலத்தைச் சார்ந்ததா என்பதை எப்படி அறிவீர்கள்?

www.tamnewsteachers.blogspot.com

9. இத்திரைப்படத்தின் முழுக் கருத்தையும் மூன்று நிமிடங்களில் உங்களால் நடித்துக் காட்ட முடியுமா?

10. இத்திரைப்படத்தில் எந்த காட்சி திருப்புமுனையாக அமைகிறது?

ஒவ்வொரு மாதமும் பொறுப்பு ஆசிரியர் திரைப்படத்தை முன்னரே பார்த்துவிட்டு, அத்திரைப்படத்தையொட்டி மேலே கொடுக்கப்பட்டுள்ள Spotlight போன்று புதிய கேள்விகளை வடிவமைத்துக் கொள்ளலாம்.